# இரட்சிப்பு பிப்ரவரி 2026 யுனிகோடு



## இயக்குநர் கடிதம்...

FROM THE MISSION DIRECTOR'S DESK

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

2026ம் ஆண்டின் 2ம் மாதத்தை காண கிருபைசெய்த தேவாதி தேவனுக்கு நன்றிபலிகளை ஏறெடுப்போம்.

பிப். 2ம் தேதி இயேசுவை குழந்தையாக தேவாலயத்தில் அர்ப்பணித்த திருநாள் (PRESENTATION OF THE LORD), 18ம் தேதி சாம்பற் புதன் (ASH WEDNESDAY) 24ம் தேதி அப்போஸ்தலனாகிய பரி. மத்தியாவின் திருநாள் (FEAST DAY OF APOSTLE ST. MATHIAS), தபசு காலத்தின் வெள்ளிக்கிழமை சிறப்பு நண்பகல்-மாலை தியான ஆராதனைகள், தபசுகாலத்தின் ஞாயிறு சிறப்பு ஆராதனைகள், உபவாச ஜெபங்கள், திருமறைத் தியானங்கள் ஆகியவற்றில் பயபக்தியுடன் பங்குபெற்று லெந்து காலத்தில் உபவாசம்-ஜெபம்-ஈகை போன்றவற்றை கடைபிடித்து தேவாசீர்வாதம் பெற உங்களை அன்புடன் வேண்டுகிறோம்.

'ஜெப-ஜன்னல்' 'வேதாகம-போட்டிகள்' 'அனைவரும்-ஊழியத்தில்' ஆகிய நமது ஊழிய திட்டங்களில் பங்குபெற உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம். பத்திரிக்கை ஊழியங்கள், வலைதள ஊழியங்கள் (www.ratchippu.com), காணொலி-செய்தி ஊழியங்கள், புத்தக-வெளியீட்டு ஊழியங்கள், கைப்பிரதி ஊழியங்கள், மிஷனரி ஊழியங்கள், திருச்சபை ஊழியங்கள் ஆகிய நமது ஊழிய இயக்குநரின் அனைத்து ஊழியங்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

ஜெப-விண்ணப்பங்கள், அனுபவ-சாட்சிகள் மற்றும் காணிக்கைகள் அனுப்புவோர் நமது ஊழிய இயக்குநரின் பெயருக்கு அனுப்பிவையுங்கள். தகவல்-தொடர்பு விபரம், வங்கி விபரம், UPI விபரம் மற்றும் QR CODE ஆகியவை பக்கம் 18-ல் மற்றும் நமது வலைதளத்தில் (www.ratchippu.com) தரப்பட்டுள்ளன.. தேவகிருபை உங்களோடு இருப்பதாக. ஆமென்.

கிறிஸ்துவின் பணியில்
அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா

# தமிழ் வேதாகமங்களின் ஒற்றுமைத் திரட்டு பிப்ரவரி 2026

வேத-வரிகள்-180 **தமிழ் இணைத் திருமறை** எஸ்தர்-4:16

**சத்திய வேதம் (ரேனியஸ்-1840)**

எனக்காக உபவாசம்பண்ணி 3-நாள் அல்லும் பகலும் புசியாமலும் குடியாமலுமிருங்கள்; நானும் என் குமரிப் பெண்களும் உபவாசம்பண்ணுவோம்; இந்தப் பிரகார மாக நியாயப்பிரமாணத்தை மீறி இராசாவண்டைக் குட் பிரவேசிப்பேன்; நான் மடிந்தாலும் மடிகிறேன்.

**பரிசுத்த வேதாகமம் (பவர்-1867)**

மூன்று நாள் அல்லும் பகலும் புசியாமலும் குடியாமலும் இருந்து, எனக்காக உபவாசம்பண்ணுங் கள்; நானும் என் தாதிமாரும் உபவாசம்பண்ணுவோம்; இவ்வித மாக சட்டத்தை மீறி, ராஜாவினிடத்தில் பிரவேசிப் பேன்; நான் செத்தாலும் சாகிறேன்.

**திருவிவிலியம் (பொது-1995)**

எனக்காக நோன்பிருந்து 3-நாள் இரவு பகல் உண்ணாமலும், குடியாமலும் இருப்பீராக! நானும் என் செவிலியரும் அவ்வாறே நோன்பிருப்போம். சட்டத் திற்குப் புறம்பே எனினும் நான் மன்னரிடம் செல்வேன்! அழிவதாயின் அழிகின்றேன்.

**பரிசுத்த பைபிள் (இ.ஆர்.வி-1998)**

எனக்காக உபவாசம் இருங்கள். 3-நாட்கள் இரவும் பகலும் உண்ணாமலும் குடியாமலும் இருங்கள்; நானும் என் வேலைக்காரப் பெண்களும் உபவாசமிருப்போம்; அழைப்பின்றி சட்டத்திற்கு எதிராய் அரசனிடம் போவேன். நான் மரித்தால் மரிக்கிறேன்..

# ஜெப-ஜன்னல் ஜெப-விண்ணப்பங்கள் - பிப்ரவரி 2026

**கர்த்தரை நோக்கி மன்றாடுவோம் - COME! LET US ALL INTERCEDE TO GOD**

1) அகில உலக சமாதானத்துக்காக... கம்போடியா-தாய்லாந்து, இஸ்ரேல்-சிரியா, இஸ்ரேல்-ஹமாஸ், இந்தியா-பாக். மற்றும் இஸ்ரேல்-ஈரான் போர்நிறுத்தங்கள் முழுமையாக கடைபிடிக் கப்பட... உக்ரைன்-ரஷ்யா போர் முடிவுக்கு வர... இலங்கை, பாகிஸ்தான், வங்கதேச பொருளாதா ரம் சீரடைய... இயற்கை பேரிடர்களிலிருந்து மக்கள் பாதுகாக்கப்பட...

2) இந்திய மக்களின் நல்வாழ்வுக்காக... இந்தியாவில் மதவாதம், பிரிவினைவாதத்தை ஊக்குவிப் போரின் சூழ்ச்சிகள் முறியடிக்கப்பட... ஒடுக்கப்பட்ட மற்றும் சிறுபான்மை மக்களுக்குக்கு எதிரான ஒடுக்குதல்கள் நிறுத்தப்பட... இந்திய நீதிமன்றங்கள் பாரபட்சமின்றி நீதி வழங்க... ஒன்றிய அரசு ஜனநாயக மரபுகளையும் அரசியல் சாசனத்தையும் மதித்து, அனைத்து தரப்பு மக்களின் நலனுக்காக பாரபட்சமின்றி செயல்பட...

3) தமிழ்நாட்டு மக்கள் இன - மத - மொழி பேதமின்றி ஒற்றுமையோடு நல்வாழ்வு வாழ... தமிழ்நாட்டில் தொழில்கள், வியாபாரம் செழிக்க... புயல், மழை, வெள்ள சேதங்களில் பாதுகாப்பு கிடைக்க... மத-வாத, பிரிவினை-வாத அரசியல் சக்திகள் கட்டுப்படுத்தப்பட...

4) திருமதி.சுந்தரிபாய் அவர்களின் முழு குடும்பமும் இரட்சிக்கப்பட...

5) திருமதி.ஷேரன் ஹெப்சிபா, திருமதி.சுமி ஜேஸ்மின், திருமதி.மெர்லின், திருமதி. பாக்கியா, திருமதி.திலகவதி மகேஷ், திருமதி.வைலட், திருமதி.சுதா, திருமதி.பிரியா சுதிர், திருமதி. புஷ்பா வதி, திருமதி.ஹனா விஜய் ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க...

6) பிரி-கே.ஜி முதல் பள்ளியிறுதி வரை கல்வி பயிலும் நம் பிள்ளைகளுக்கு நல்ல சுகம், பெலன் அருளப்பட... ஆஷெர், ஜெரிக், ஜெர்லின், பிரியங்கா, ஷாலோம், கிளாட்சன் ஆகிய நம் பிள்ளைகளுக்கு சிறந்த ஞானம் வழங்கப்பட... 10, 11, 12ம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதுகிற நம் பிள்ளைகளுக்கு சிறந்த ஞானம் வழங்கப்பட

7) பிளஸ்-1, முதல் பி.ஹெச்.டி வரை உயர்-கல்வி பயிலும் நம் பிள்ளைகள் பிரேம், ஷிஃபியா, ஷெரின் டேவிட், ஜாஸ்மின், சிப்ரா, ஜாஷ்வா மேத்யூ, வில்சன், ஜோயல், ஜெனிபர், சாம், சிந்தியா பிரகாஷ் ஆகியோருக்கு சிறந்த ஞானம் வழங்கப்பட...

8) திருமதி.ஷேரன் ஹெப்ஸிபா அவர்களின் சுக பிரசவத்துக்காக...

9) திருமதி.ஈவ்லின் USA, திருமதி.செல்வி, திரு.லவ்ஸ்லி ஞானதாஸ், திருமதி.ஜேஸ்மின் ஞானதாஸ், திரு.அசரியா ஞானதாஸ், பேபி.ஜாஃபியா, சகோ.நெல்சன், திரு.ஜெரி, திருமதி. லீலா டேவிட், திரு.நெல்சன் (நகோமி), திரு.வெஸ்லி சாமுவேல், திரு.சுந்தர்சிங், திரு.அப்பன் டேவிட், திரு.ஜூலியன் ஆகியோரின் சரீர சுகத்திற்காக...

10) திருமதி.ராஜேஷ்வரி, திருமதி.சுந்தரிபாய், திரு.ஜெபனேசர், திருமதி.ஐரீன் வாக்கர், திருமதி. ஞானம் ஜெபராஜ், திருமதி.ஞானம் ராஜசேகர், Dr.ஷீபா, திருமதி.ஐலீன் செல்லத்துரை, திருமதி. ரத்னாபாய் சாம், திருமதி.வசந்தா அன்பன், திருமதி. சுகிர்தா சின்னதுரை ஆகியோரின் குடும்ப ஆசீர்வாதங்களுக்காக...

11) நமது ஊழிய ஆதரவாளர்களான திருமதி.ரேச்சல் ஈஸ்டர், திருமதி.ஜெஸி செல்லதுரை, திருமதி.ரூபவதி நோபிள், திருமதி.பியூலா ஜேசுராஜன், திருமதி.கிரெசெல்டா செய்லர், திருமதி. வைலட் கிறிஸ்டோபர், திருமதி.ஐரீன் வாக்கர் (கிரேஸ் திவ்யா), திருமதி.ராணி சாமுவேல்ராஜ், திரு.J.R.டேவிட், திருமதி.ஷைனி ஜேம்ஸ், திருமதி.அரோமா சாத்ராக், திரு.சாம்சன் ஆபிரகாம், திரு.S.J.P.ராஜா, திரு.அசரியா ஞானதாஸ், திருமதி.வனஜா ஹெர்பர்ட் ஆகியோருடைய குடும்பங்களுக்காக...

தபசு காலம்: சிறப்பு தேவசெய்தி...

# எஸ்தரின் உபவாசம்

# கடவுளுடனான புதுப்பிக்கப்பட்ட தொடர்பு

## ESTHER'S FASTING: THE RENEWED COMMUNE WITH GOD



Rev. S.J.D.Dharmaraja

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே! ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் இனிய திருப்பெயரில் அன்போடு உங்களை வாழ்த்துகிறேன். மீண்டும் ஒரு லெந்து காலத்தை இம்மாதம் 18ம் தேதியான சாம்பல் புதன் அன்று துவக்கும் வேளையில், எஸ்தர் ராஜாத்தியின் உபவாசத்தை மையமாகக்கொண்ட தியானத்துடன் கடவுளுடனான நம் தொடர்பை புதுப்பித்துக்கொள்வோம்.

**பிரசங்க வாக்கியம்:**

"நீர் போய், சூசானில் இருக்கிற யூதரையெல்லாம் கூடிவரச் செய்து, மூன்றுநாள் அல்லும் பகலும் புசியாமலும் குடியாமலுமிருந்து, எனக்காக உபவாசம் பண்ணுங்கள்; நானும் என் தாதிமாரும் உபவாசம் பண்ணுவோம்; இவ்விதமாக சட்டத்தை மீறி, ராஜாவினிடத்தில் பிரவேசிப்பேன்; நான் செத்தாலும் சாகிறேன்." எஸ்.4:16

**தெளிவான நோக்கத்தைக்கொண்ட உபவாசம்:**

நீங்கள் எப்போது சாப்பிடாமலும் நீர் அருந்தாமலும் இருக்க வேண்டியிருந்தது? ஒருவேளை நீங்கள் ஒரு மருத்துவ ஆய்வு சோதனைக்கு முன்போ அல்லது ஒரு அறுவை சிகிச்சைக்கு முன்போ அவ்வாறு இருக்க வேண்டியிருக்கலாம். ஒருவேளை நீங்கள் எடைகுறைப்புக்காக உபவாசம் இருந்திருக்கலாம். இன்னும் பல்வேறு நடைமுறை காரணங்கள் இருந்திருக்கலாம். நாம் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக அவ்வாறு உணவையும் தண்ணீரையும் துறந்திருக்கலாம். அவ்வண்ணமாகவே நம் ஆவிக்குறிய பற்றுறுதியில், உபவாசம் என்பது பல்வேறு சிறப்பான நோக்கங்களைக் கொண்டுள்ளது. சிலர் கடவுளிடமிருந்து வழிகாட்டுதலைத் தேடும்போது உபவாசம் இருக்கிறார்கள். சிலர் துக்க நாட்களைக் கடைபிடிக்கும் செயல்முறையின் ஒரு பகுதியாக உபவாசம் செய்கிறார்கள். சிலர் மனந்திரும்புதலில் அல்லது எல்லாம்வல்ல கடவுளுக்கு முன் தங்களைத் தாழ்த்தும்படி உபவாசம் செய்கிறார்கள். காரணம் எதுவாயினும், உபவாசத்தின் ஒவ்வொரு செயலும் இறுதியில் ஒரு நோக்கத்தைக் கொண்டுள்ளது.

எஸ்தர் ராஜாத்தியைக் குறித்து நாம் அனைவரும் அறிந்திருக்கிறோம். எஸ்தர் ராஜாத்தி எஸ்.4:16,17 வசனங்களில் தன் சகோதரனாகிய மெர்தேகாய்க்கு அனுப்புகிற செய்தியானது,

குறிப்பிட்ட நோக்கத்திற்கான ஒரு உபவாசத்தையே சுட்டிக்காட்டுகிறது. ஆமானின் தீய சதித் திட்டத்தையும், அதைத் தொடர்ந்து போடப்பட்ட அகாஸ்வேரு அரசனின் அரசாணையையும் எஸ்தர் ராஜாத்தி மற்றும் சிறையிருப்பின் யூதர்கள் எவ்வாறு எதிர்கொண்டார்கள் என்பதையும் நாம் வேதாகமத்தில், எஸ்தரின் சரித்திரத்தில் படிக்கிறோம். மிகவும் நெருக்கடியான காலகட்டத் தில் கடவுளுடனான தனது தொடர்பை புதுப்பித்துக்கொள்ளவும், மக்களின் இக்கட்டான நிலையை கடவுளுக்குத் தெரியப்படுத்தவும், தன் இன மக்களுக்கு விடுதலையை கோரவும் அவள் உபவாசம் இருந்ததாக வேதம் (எஸ்.4:15-16) சொல்கிறது. உபவாசம் மற்றும் பிரார்த்தனை மூலம், இக்கட்டான சூழ்நிலையில் உதவிபெற்றிட, சர்வவல்லவரின் வல்லமை மீது நம்பிக்கை கொள்வது மட்டுமல்ல, அவருடைய சித்தத்துக்கு தன்னை அர்ப்பணித்து, தன்னைத் தாழ்த்திக் கொள்கிறாள். அந்த தாழ்மை நிறைந்த அர்ப்பணிப்பின் வெளிப்பாடு தான் இந்த வசனத்தில் நம் மனதை அழுத்தமாதகத் தொடும் 'நான் செத்தாலும் சாகிறேன்' என்கிற கடைசி வரி. பற்றுறுதி நிறைந்த உபவாசமும் ஜெபமும் மட்டுமே கடவுளுடனான தங்கள் உறவை புதுப்பித்து, விடுதலையை உறுதிசெய்யும் என்பதை எஸ்தர் அறிந்திருந்தார். உபவாசமும் ஜெபமும் சர்வவல்ல கடவுள் மீதான உள்ளார்ந்த நம்பிக்கையின் வெளிப்புற வெளிப்பாடுகள் மாத்திரமே; எனினும், கடவுளின் திருவுளச்சித்தமே விடுதலை தரும் என்பதை யும் அறிந்திருந்ததாலேயே எஸ்தர் ராஜாத்தி இவ்வாறு சொல்கிறார். இந்த தபசு காலத்தில் நமது உபவாசம் எத்தகைய நோக்கத்தைக் கொண்டிருக்கிறது?

**சாதாரண விடுதலை அல்ல - மேலதிக விடுதலை அளித்த உபவாசம்:**

எஸ்தரின் உபவாசம் யூத மக்களின் விடுதலைக்கு வழிவகுத்தது, அது எஸ்தர் விரும்பிய சாதாரண விடுதலையை அல்ல, ஒரு மேலதிக விடுதலையை வழங்கியது என எஸ்.8:8, எஸ்.8:12 வசனங்கள் சொல்லுகின்றன. அகாஸ்வேரு அரசன் சொல்கிறார், "உங்களுக்கு இஷ்ட மானபடி நீங்கள் ராஜாவின் நாமத்தில் யூதருக்காக எழுதி, ராஜாவின் மோதிரத்தினால் முத்திரை போடுங்கள்." என்பதே ஆசீர்வாதத்துடன் கூடிய அந்த மேலதிக விடுதலை.

ராஜாவின் புதிய ஆணை யூதர்களுக்கு வேறுபல நன்மைகளை வழங்கியதை வசனம் 12 விவரிக்கிறது, "யூதர் ஒன்றாய்ச் சேர்ந்து, தங்கள் பிராணனைக் காப்பாற்றவும், தங்களை விரோதிக்கும் சத்துருக்களாகிய எல்லாரையும், அவர்கள் குழந்தைகளையும் ஸ்திரீகளையும் நிர்மூலமாக்கவும், அவர்கள் உடைமைகளைக் கொள்ளையிடவும் ராஜா யூதருக்குக் கட்டளை யிட்டார்." இவ்வாறு எஸ்தர் ராஜாத்தியின் உபவாசமானது எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றியதோடு மேலதிக ஆசீர்வாதங்களாக யூதர்-ஒற்றுமை, சத்துருக்கள்-அழிவு, கொள்ளை பொருள்-நிறைவு ஆகியவற்றை பெற்றுத்தந்தது. இந்த லெந்து காலத்தில், உபவாச ஜெபத்தின் மூலம் மேலதிக ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ள உங்களை வாழ்த்துகிறேன்.

**வரையறைக்கு அப்பாற்பட்ட உபவாசம்:**

எஸ்தர்-உபவாசம் வாயிலாக சில முக்கிய விஷயங்களை அறிந்துகொள்வோம். முதலாவதாக, உபவாசத்திற்கு குறிப்பிட்ட 'ரைம்-ரிதம்' (வரையறை) இருக்கவேண்டிய அவசியமில்லை. சூசாவில் எஸ்தரும் யூதர்களும் 3 நாட்கள் உபவாசம் இருந்து ஜெபித்தார்கள், தாவீது ராஜா தனது மகனின் சுகவீனத்தின் போது 7 நாட்கள் உபவாசம் இருந்தார். மட்டுமல்ல மோசே, எலியா, இயேசு 40 நாட்கள் உபவாசம் இருந்தார்கள் என நாம் வாசிக்கிறோம். எனவே, உபவாசச் செயலை வரையறுக்க எந்த விதிகளும் இல்லை; ஆனால் உபவாச ஜெபமானது, நமது விசுவாச

உறுதியின் வழியாய் கடவுளுடனான நமது தொடர்பை புதுப்பித்து, இன்னும் அதிகமாக நாம் கடவுளை நெருங்கிச்சேர நம்மை வழிநடத்தும் உன்னத நோக்கத்தைக் கொண்டுள்ளது.

இரண்டாவதாக, நாம் உபவாசம் இருந்து ஜெபிக்கும்போது நாம் விரும்பும் பதில் கிடைக்காவிட்டாலும், கர்த்தர் நம்மை கைவிட்டு விடுவதில்லை. வாழ்க்கையின் தடைகளைத் தாண்டுவதற்கான கருவிகள் மற்றும் வழிமுறைகளை அவர் வழங்குகிறார். பல நேரங்களில் உபவாச ஜெபத்திற்கான பதிலானது, ஒரு பிரச்சினைக்கான தீர்வாகவோ அல்லது பாடுகளை அவமானங்களை எதிர்கொள்வதற்கான சக்தியாகவோ அல்லது வேறு வழியிலான ஒரு ஆசீர்வாதமாகவோ இருக்கலாம். எப்படியாயினும், நாம் கிறிஸ்துவைச் சார்ந்திருக்கும்போது விளைவுகளைக் குறித்துக் கவலைப்படாமல்,, 'கடவுள் நமக்காக இருக்கிறார்' என்ற உண்மையான பற்றுறுதியைப் பெறமுடியும்.

அன்பானவர்களே! உபவாசமானது விசுவாசம் மற்றும் ஆவிக்குறிய பலத்தை அதிகரிக்கவும், நம்மை மிகவும் நேசிக்கும் கடவுளுடனான நமது தொடர்பை புதுப்பிக்கவும் உதவுகிறது. ஒருவேளை, எஸ்தரைப் போலவே, நாமும் இதுபோன்ற ஒரு நோக்கத்திற்காகப் படைக்கப் பட்டிருக்கலாம். உங்களுடைய உபவாசத்தின்போது, கடவுளுடனான உங்கள் தனிப்பட்ட தொடர்பின் நோக்கம் என்னவாக இருக்கிறது? உபவாசம் மற்றும் ஜெபத்தின் மூலம் நல்ல ஆண்டவர் உங்கள் வாழ்வில் எப்படிப்பட்ட விடுதலையை, வெற்றியை அளித்தார்? என்பதை உங்களுடன் வாழும் மக்களோடு பகிர்ந்துகொண்டு அவர்களுக்கு ஊக்கம் அளியுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

---

அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா, ஆயர் மற்றும் உழிய இயக்குநர்,
நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு, சாலிகிராமம், சென்னை. தமிழ்நாடு, தென்னிந்தியா

==========================================================================

**நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு ஊழியங்கள் - Good Tidings Bible-Prints Ministries**

# 'நல்ல விதைகள்' சுவிசேஷ கைப்பிரதிகள்

'GOOD SEEDS' GOSPEL TRACTS

சுவிசேஷ ஊழிய பயன்பாட்டுக்காக நற்செய்தி கைப்பிரதிகளை வெளியிட்டு அவற்றை கிறிஸ்துவை அறியாத மக்களுக்கு விநியோகம் செய்துவருகிறோம். மட்டுமல்ல நற்செய்தி பணி செய்வோருக்கு கைபிரதிகளை இலவசமாய் வழங்கி வருகிறோம். ஒரு-வகை கைப்பிரதி வெளியிட ஆகும் செலவு ரூ.3500/- மட்டும். கைப்பிரதிகளை SPONSOR செய்து அனைத்து மக்களும் இயேசுவை அறிந்திட உதவுங்கள். SPONSOR செய்ய விரும்பும் அன்பர்கள் நமது ஊழிய இயக்குநரை தொடர்புகொள்ளுங்கள். கைப்பிரதிகளை SPONSOR செய்த தேவபிள்ளை களுக்கு எங்கள் நன்றி. எமது கைப்பிரதிகளை இலவசமாகப் பெற்று உங்கள் ஊழியங்களில் பயன்படுத்த அன்புடன் அழைக்கிறோம். ஆமேன்.

---

அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா, ஊழிய இயக்குநர்
நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு, சாலிகிராமம், சென்னை-93. தென்னிந்தியா

.==========================================================================

வேத ஆராய்ச்சி ....

# சங்கீதங்கள் கற்றுத்தரும் விலையேறப்பெற்ற சத்தியங்கள்



சங்கீதம்-105 பிப்ரவரி 2026 எப்பிசோடு-105

AUTHOR: Rev. Dr. D. SURESH RAJAN

**முன்னுரை:**

இச்சங்கீதம் ஒரு வரலாற்றுப் பதிவு; மட்டுமல்ல, இது ஆண்டவர் தம் மக்களோடு இடைபட்ட விதத்தை வெளிப்படுத்தும் சாட்சி. மனிதர் தங்கள் வாக்குறுதிகளை மறக்கலாம்; ஆனால், ஆண்டவர் தம் வாக்குகளை மறப்பதில்லை, அலட்சியம் செய்வதுமில்லை என்பதை வெளிப் படுத்தும் ஒரு அற்புதப் பாடல். இது. நம் வாழ்வில் ஆண்டவர் செய்த செயல்களை நினைவு கூர்ந்து நன்றியுடனும், நம்பிக்கையுடனும், கீழ்ப்படிதலுடனும் வாழ அழைக்கும் பாடல். இந்த திருப்பாடலின் முதல் வசனத்திலேயே அதன் முழு கருப்பொருளும் அடங்கியுள்ளது.

**1. ஆண்டவரை நினைவுகூர்ந்து நன்றியுடன் வாழ அழைப்பு:**

'ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள்!' (வச.1)

நமக்கு யாராவது உதவி செய்வார்களானால் அவர்களுக்கு நன்றி செலுத்துவது நமது இயல்பு. நமது பரமதந்தையாகிய கடவுள் நமக்கு செய்த மற்றும் செய்துகொண்டிருக்கிற அனைத்து உதவிகளுக்காகவும் அவருக்கு நன்றி செலுத்துதல் என்பது மிக அவசியம். நாம் பல நேரங் களில் கடவுளின் செயலை மறந்து விடுகிறோம். நம் வாழ்வின் அனைத்து சம்பவங்களும் நமது முயற்சியால் தான் நடக்கிறது என்று எண்ணி, கடவுளுக்கு நன்றிசெலுத்த தவறி விடுகிறோம்.

'அவர் தமது உடன்படிக்கையை என்றென்றும் நினைவில் கொள்கின்றார்: ஆயிரம் தலை முறைக்கென தாம் அளித்த வாக்குறுதியை நினைவுகூர்கின்றார்'. (வச.8) என்று சங்கீதக்காரர் இங்கு கூறுகிறார். ஆண்டவர் தாம் சொன்ன வார்த்தையை ஒருபோதும் மறப்பதில்லை. ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு தொடங்கி இன்றுவரை தலைமுறைகள் மாறினும் ஆண்டவரின் வாக்குறுதி மட்டும் மாறுவதேயில்லை. ஆகவே அவருக்கு நாம் நன்றி செலுத்த வேண்டும்.

அவர், பகைவரிடமிருந்து நம்மை எப்படி காக்கிறார் என்பதை வசனங்கள் 12 முதல் 15 வரை தெளிவாக காணலாம். நாம் சோர்வடைந்து, தனிமையாய் உணரும்போது பல சமயங்களில் ஆண்டவர் நம்மை கைவிட்டுவிட்டார் என்று எண்ணுகிறோம். யோசேப்பு என்ற நமது முற்பிதா அடிமையாக விற்கப்பட்டார். சிறை வாசம், அவமானம் என பல துன்பங்கள் அவருக்கு வந்தன. 'அவருடைய கால்களுக்கு விலங்கிட்டு அவரைத் துன்புறுத்தினர். அவருடைய கழுத்தில் இரும்புப் பட்டையை மாட்டினர்' (வச.18); அது தண்டனை அல்ல, மாறாக, ஆண்டவருடைய திட்டத்தின் ஒரு பகுதியே அது. அவருடைய துயர அனுபவங்கள், அவரை அரண்மனைக்கு உயர்த்தும் வழிகளாக மாறின. இன்று நாம் அனுபவிக்கும் சோர்வு, நாளைய உயர்வுக்கான ஆயத்தமாக இருக்கலாம்; ஆகவே, 'எல்லாம் நம் நன்மைக்கே' என்பதை அறிந்துணர்ந்து ஆண்டவருக்கு நன்றி செலுத்துவோம்.

**2. ஆண்டவரை வழிபட அழைப்பு:**

'அவர்தம் பெயரைச் சொல்லி வழிபடுங்கள்' (வச.1)

நம் வாழ்வின் நாயகனாகிய ஆண்டவரையே நாம் வழிபடவேண்டும். அவரே நமது வழி பாட்டுக்கு ஏற்புடையவர். நமது மூத்த தந்தையர் எகிப்தின் அடிமைத் தனத்திலிருந்து இறைவன் கொடுத்த வியத்தகு விடுதலையை மறந்துவிட்டனர். எகிப்து தேசத்தை அதிரவைத்த வாதைகள், விடுதலைப் பயணத்தில் வான மன்னா உணவு, பாறையிலிருந்து தண்ணீர், என, பல அற்புதங்களை கண்ட அவர்கள் ஆண்டவரை மறந்ததோடு, பொன் கன்றுக்குட்டியை வணங்கத் துணிகரம் கொண்டனர்.

இன்றும் நம்மில் பலர் ஆண்டவர் அருளிய மீட்பை அலட்சியம் செய்து, அவர் செய்த நன்மை களை மறந்து, அவரை வழிபடாமல் பொருட்களையும், மனிதர்களையும் (மறைமுகமாக) வழி படுகிறோம். பல நேரங்களில் பாடல்கள்தான் வழிபாடு என்று நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளுகிறோம். 'ஆண்டவரையும் அவரது ஆற்றலையும் தேடுங்கள்! அவரது திருமுகத்தை இடையறாது நாடுங்கள்!' (வச.4) என்ற திரு வாக்கின்படி இன்று நம்மையும் நமது வாழ்வையும் அவருக்கு அற்பணித்து அவரையே தொழுதுகொள்ள தீர்மானம் எடுப்போம்.

**3. ஆண்டவரை அறிவிக்க அழைப்பு:**

'அவர்தம் செயல்களை மக்களினங்கள் அறியச் செய்யுங்கள்|. (வச.1) என்று இத்திருப்பாடல் அறைகூவல் விடுக்கிறது. கடவுளிடமிருந்து ஆவிக்குரிய, மற்றும் உடல் சார்ந்த நன்மைகளை பெற்ற நாம், மற்றவர்களுக்கு ஆண்டவரின் செயல்களை அறிவிப்பது மிகவும் அவசியமாகும். நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் தனது இறுதி கட்டளையாக அனைத்துலக மக்களுக்கும் நற்செய்தி அறிவிக்குமாறு கூறியுள்ளார் (மத்.28:19-20, மாற்.16:15, லூக்.24:46-48, யோவா.20:21, அப்.1:8). ஆண்டவருடைய இந்த பெருங்கட்டளையை நாம் அலட்சியம் செய்யா மல் அவருடைய அரும்பெரும் செயல்களையும் அவர் நமது ஆத்துமாவுக்கு செய்த நன்மை களையும் அவசரமாய் அறிவிக்க வேண்டும்.

**முடிவுரை:**

ஆண்டவரின் செயல்களுக்கு ஒரு நோக்கம் உண்டு. திருமறையில் ஆண்டவர் செய்த அனைத்து செயல்களும் நாம் ஆண்டவரை நன்றாக அறிந்து கொள்ளவும், அவர்-வழி நடக்கவும் அவர்-புகழ் பாடவுமே என்பதை உணர்ந்தவர்களாக நம்பிக்கையோடு சேர்வோம், நன்றியுடன் வாழ்வோம், நாதன்வழி நடப்போம். 'அவர்கள் அவர்தம் கட்டளைகளை கடைப்பிடிக்கவும், அவர்தம் சட்டங் களின்படி ஒழுகவுமே அவர் இவ்வாறு செய்தார். அல்லேலூயா!' (வச.45)

இறைவன் தாமே தமது நிறைவான நன்மைகளால் நம்மை நிறைத்து வழிநடத்துவாராக.

சங்கீதங்கள் கற்றுத்தரும்விலையேறப்பெற்ற சத்தியங்கள். தொடரும்......

ஆசிரியர்: அருட்திரு. அறிவர். டி. சுரேஷ் ராஜன், தலைவர் (இந்திய மறை மாநாடு), குளோபல் மெத்தடிஸ்ட் திருச்சபை.

AUTHOR: REV. DR. D. SURESH RAJAN, CONFERENCE SUPERINTENDENT, INDIA ANNUAL CONFERENCE, GLOBAL METHODIST CHURCH IN INDIA.

=================================================================================

# வேதாகம போட்டி-183 (ஜனவரி போட்டிகள்)

## சரியான பதிலளித்தோர்

1) அமிர்தகனி பொன்ராஜ் (சென்)
2) ஏஞ்சல் சி. (திலி)
3) ஏஞ்சல் டார்வின் (கன்)
4) ஏஞ்சல் ராஜதுரை (சென்)
5) ஏஞ்சலின் யோசபாத் ராஜா (சென்)
6) ஏஞ்சலின் ரூஸ்வெல்ட் (சென்)
7) ஏஞ்சலின் வில்லியம்ஸ் (சென்)
8) அன்னாள் ஜெபக்கனி (கோய)
9) அனி பாய் ஜாண் (திலி)
10) அரோமா சாத்ராக் (திலி)
11) அருள்செல்வி (விரு)
12) அருள்செல்வி ஜாண்ஸன் (திலி)
13) பெல்சி தங்கராஜ் (சென்)
14) பெனிட்டா பிராங்க்ளின் னச. (சென்)
15) பிரீனா மேக்சின் தெபோரா (ராணி)
16) பிரிஸ்கில்லாள் பொன்ராஜ் (தென்)
17) பியூலா ஜேசுராஜன் (பாண்)
18) பியூலா ராஜசெல்வன் (கோய)
19) செலினா பென்சி வில்சன் Dr. (குவை)
20) செலினா வின்சென்ட் (திலி)
21) சந்திராபாய் மாசிலாமணி (சென்)
22) சந்திரலேகா (ஆபி)
23) சந்திரா மேரி விக்டர் (பெங்)
24) சந்திரா சாமுவேல் (திலி)
25) சார்லஸ் ஃபின்னி Dr. (சென்)
26) சார்லட் டேவிட் (சென்)
27) சித்ரா பெஞ்சமின் (திளு)
28) கிறிஸ்டல் ஜாய் யோபு (திதூ)
29) கிறிஸ்துதாஸ் (ஈரோ)
30) கிறிஸ்டி ஞானராஜ் (சென்)
31) கிறிஸ்டி மெர்சி ராஜ்குமார்(தூத்)
32) கிறிஸ்டி பொன்னுசாமி (மது)
33) சிசிலி புஷ்பம் டேவிட் (சென்)
34) சிந்தி ஜாஷ்வா (தஞ்)
35) டெய்ஸி பில்பா (மும்)
36) டெய்ஸி ஜெபதாஸ் (திசி)
37) டெய்ஸி சாம் (கன்)
38) டேனியல் தாமஸ் (திலி)
39) டேவிட் J.R. (சென்/கோய)
40) தெபோராள் D. (சென்)
41) தேவபொன்மலர் ஜோனத்தான் (சென்)
42) தேவநேசம் ராஜாசிங் (சென்)
43) டோராபாய் ஜூலியஸ்(சென்)
44) தீபா மெர்சி கிறிஸ்டோபர்(சென்)
45) தேவகனி எமிலிசன் (சென்)
46) தேவகிருபை முத்து சகரியா (பாண்;)
47) எபெனேசர் டேனியல் (கத்)
48) எலிசபெத் அலெக்ஸாண்டர் (சென்)
49) எலிசபெத் செல்லத்துரை (சென்)
50) எஸ்தர் டி.ஆர். (திலி)
51) எவாஞ்சலின் ஜோன்ஸ் Dr. (சேல)
52) கெத்ஸி தம்புராஜ் (பெங்)
53) குளோரி ரவீந்திரன் (திலி)
54) ஞானஜோதி பேரின்பம் (விரு)
55) ஞானம் ஜெபராஜ் (திலி)
56) ஞானம் பிலிப் (கோய)
57) ஞான ரோஸ் G. (திளு)
58) ஞானசெல்வி மோசஸ் (அமெ)
59) ஞானசுந்தரி நாகராஜன் (திலி)
60) கிரேஸ் பொன்மணி ரெக்ஸ் (சென்)
61) கிரேஸ் பிரின்ஸ் (தென்)
62) கிரேஸி கிறிஸ்டோபர் (சென்)

63) கிரேஸியா ஜெயபால் (சென்)
64) ஹெலென் ஜான்சிராணி (திலி)
65) ஹெலென் ஜெனிபர் பாண்டியன் (சென்)
66) ஹெலென் I. (திஞூ)
67) ஹெலன் திலக் (தூத்)
68) ஹேமா அஜீத் (சென்)
69) ஹேமா கேப்ரியேல் (பெங்)
70) ஹெப்சி அசரியா (பாண்)
71) ஹிம்லா ராஜகுமாரி (சென்)
72) ஹன்ஸா மங்களராஜ் (சென்)
73) இளவரசி ஜோபிதா சுந்தராஜன்(கோய)
74) இந்திரா கெத்ஸி டேவிட் (திலி)
75) இன்பவல்லி கலைச்செல்வன் (மது)
76) ஜமீலா செல்வராஜ் (சென்)
77) ஜமுனா K. (சென்)
78) ஜேன்ஸ் (ஜான்ஸி) (கோய)
79) ஜேன் தர்மராஜ் (திலி)
80) ஜான்ஸி சந்தியா (திலி)
81) ஜாஸ்மின் ஞானதாஸ் (சென்)
82) ஜாஸ்மின் ஜீவன் டேவிட் (மது)
83) ஜெபா ஜெயராஜ் (சென்)
84) ஜெபக்குட்டி மோசஸ் (திலி)
85) ஜெபரஞ்சிதம் மெர்லின் (தூத்)
86) ஜெபசீலி கிளின்டன் (தூத்)
87) ஜெபா சீனி (திரு)
88) ஜெபா ஜோன்ஸ் (கோய)
89) ஜெனிலா S. (சென்)
90) ஜென்ஸி ஞானேஷ் (மும்)
91) ஜெரின் ஸ்டீபன் (மும்)
92) ஜெஸி செல்லதுரை (கோய)
93) ஜெஸி ஜெயக்குமார் (திலி)
94) ஜெஸிதா அகஸ்டின் (ஆபி)
95) ஜெயந்தி ஹனா கிரிஸ்டோபர் (அரி)
96) ஜெயசீலி மார்டின் (தூத்)
97) ஜாய்ஸ் பாண்டியன் (சென்)
98) ஜூலியட் அசோக் குமார் (தூத்)
99) ஜூலியட் ஜெயக்குமார் (திலி)
100) ஜஸ்டினா ஜெபராணி ராஜீவ் (அரி)
101) கலா கிருபாகரன் (திலி)
102) கலையரசி செல்வராஜ் (சென்)
103) கஸ்தூரி எலியாஸ் (திலி)
104) கிருபா R. (தென்)
105) கிருபாவதி S. (சென்)
106) கோயில்பிள்ளை ஞானதாய் (தென்)
107) லதா மைகேல்ராஜ் (சென்)
108) லீலா டேவிட் (சென்)
109) லீலா ஜோஸப் (கோய)
110) லில்லி ஜாண்ஸன் (சென்)
111) லிஸி டென்சிங் (திலி)
112) லோவிசாள் ராஜேந்திரன் (தென்)
113) மல்லிகா ஜெபராஜ் (தூத்)
114) மல்லிகா எ. (சென்)
115) மரிய பாப்பா (சென்)
116) மரியாள் ஜே.எஸ் (தூத்)
117) மேபா ஞான சுகி (கன்)
118) மெஜிலா ஜோஷ்வா (தூத்)
119) மெர்சி ஃபுளோரா பாஸ்கரன் (வேலூ)
120) மெர்லின் தேவராஜ் (சென்)
121) மெர்லின் சாமுவேல் (சென்)
122) மெரிட்டா ஜெயபாலன் (திசி)
123) மில்காள் சாம் (சென்)
124) முத்துமாலினி அலீஸ் (கோய)
125) நேச மாலா பீட்டர் (திலி)
126) நிக்ஸன் எவர்பிரைட் (திலி)
127) ஆலிவ் ஜெயபாலன் (கோய)
128) ஓலிவியா லேங்டன் (திசி)
129) பாக்யபாய் ஆரோன் (திலி)
130) பமீலா எட்வின் (கன்)
131) பெர்சி பால் பொன்சிங் (தூத்)
132) பிங்க்லின் சந்தோஷ் (சென்)

133) பொன்மணி உத்தமசிங் (சென்)
134) பிரேமா ஜானி (தென்)
135) பிரேமா ஸ்டாலின் (சென்)
136) பிரேம்குமாரி ஜெய்சிங் (சென்)
137) பிரின்ஸ் தயாநிதி (சென்)
138) பிரிசில்லா சந்திரதாஸ் (சென்)
139) பிரிஸ்கில்லாள் சசி (கோய)
140) ரேச்சல் ஈஸ்டர் (வேலூ)
141) ராஜபிரமீளா (திதூ)
142) ராஜ்மேரி சார்லஸ் (கேர)
143) ரமோலா அதிசயராஜ் (திலி)
144) ராணி ஃபுளோரா (தென்)
145) ராணி பிரபாகர் (திலி)
146) ராணி சாமுவேல்ராஜ் (சென்)
147) ரத்னாவதி பாண்டியன் (சென்)
148) ரோஸி ஸ்டீபன் (சென்)
149) ரியஸ்ஸி ஜாண் சிங் (கோய)
150) ரூபவதி நோபிள் (திலி)
151) ரூத் HAPP (திசி)
152) ரூத் ஜாண்ஸன் (திலி)
153) ரூத் நரேஷ் (சென்)
154) சலோமி மனோகர் Dr. (சென்)
155) சம்பு ஜெயச்சந்திரன் (மது)
156) சாரா பாலசிங் (மது)
157) சரோஜா செல்வராஜ் (சென்)
158) சரோஜினி எலிசபெத் (சென்)
159) செல்வ அமுதா ஜார்ஜ் (சென்)
160) செல்வ பென்சி ஆபேல் (ராணி)
161) செல்வராணி ஆல்பர்ட் (சென்)
162) செல்வி அமிர்தராஜ் (திளு)
163) செல்வின் S.. (தூத்)
164) செல்வின் துரை Pastor (மஹா)
165) சாந்தி ஆல்பர்ட் (தென்)
166) சாந்தி ஜெயசீலன் (சென்)
167) சாந்தி ரோஸ் (கோய)
168) ஷர்மீளா செல்வராஜ் (கட)
169) ஷீலா இஸ்ரேல் (திசி)
170) ஷெரீன் ஜெபராஜ் (திளு)
171) சில்வியா ஃபின்னி Dr. (சென்)
172) சவுந்தரம் சாலமோன் (சென்)
173) ஸ்டெல்லா டேவிட் (தூத்)
174) சுகந்தி ஜெயச்சந்திரன் (கோய)
175) சுகிர்தா சின்னதுரை (திலி)
176) சுஜாதா சாமுவேல் (சென்)
177) சுசீலா தியோடர் (திசி)
178) சுவர்ணலதா அற்புதராஜ் (சென்)
179) தனசீலி ஞானராஜ் (சென்)
180) தெல்மா ஸ்டேன்லி (மது)
181) உமா குளோரி (சென்)
182) உஷா ஜெபராணி SIS. H. (திளு)
183) வனஜா மாரிமுத்து (மது)
184) வசந்தா அன்பன் (திலி)
185) வசந்தா சந்திரசேகர் (கோய)
186) வசந்தா துரைராஜ் (ஓஎப்டி)(திசி)
187) வசந்தா சேகர் (சென்)
188) வசந்தி கருணாகரன் (சென்)
189) வசந்தி வாசன் (சென்)
190) விஜயராணி A. (சென்)
191) விஜி டேனியல் (செங்)
192) விமலா ஜெயக்குமார் (தூத்)
193) வினோலியா பால் (மது)
194) வினோலியா வில்சன் (திதூ)
195) வைலட் கிறிஸ்டோபர் (திலி)
196) வைலட் சைரஸ் (திலி)

# வேதாகம போட்டி-183 டிசம்பர் போட்டிகள் - நெகேமியா

## சரியான விடைகள்

1. தீயவை - இர. பக்கம்.2
2. இஸ்ரவேலரின் - இர. பக்கம்.19
3. தீர்மானங்கள் நெகே. 6:1 - இர. பக்கம்.19
4. முந்தி வந். வம். அட்டவணை நெகே.7:5
5. யூதாவிலிருந்து நெகே. 1:2
6. தொபியாவோடே நெகே. 13:4
7. எருசலேமுக்கு புறம்பே நெகே. 13:20
8. தவறு - நெகே. 3:3

09. சரி - நெகே. 8:10
10. சரி - நெகே. 4:20
11. இ - ஒரு அறையை நெகே. 13:7
12. இ - அலங்;கம் நெகே. 6:15
13. ஆ - எருசலேமில் நெகே. 11:2
14. நெகேமியா நெகே. 5:14-16
15. எலியாசிப் நெகே. 13:4-7
16. சன்பல்லாத்-நெகே.வுக்கு நெகே.6:5-7

---

# ‘விடுகதை விவிலியம்’

## புத்தகம் வெளியிடப்பட்டது...!

**The Riddle Bible**
**BOOK RELEASED**

**எமது 30வது வெளியீடு விற்பனைக்கு தயார்**




இரட்சிப்பு பத்திரிக்கையில் கடந்த 15 ஆண்டுகளாக ‘வேதக்கதை விடு கதை’ என்ற பெயரில் வெளியான வேதாகம விடுகதைகள் தொகுக் கப்பட்டு ‘விடுகதை விவிலியம்’ என்ற பெயரில் புத்தகமாக வெளி யிடப்பட்டது. விற்பனைக்கு தயார் நிலையில் உள்ள இப்புத்தகத்தை வாங்கி, வாசித்துப் பயன்பெற அன்புடன் அழைக்கிறோம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்

**பின்-குறிப்பு:** விலை ரூ.100 மட்டும் (தபாலில் பெற ரூ.150 மட்டும்) கிடைக்குமிடம்: இரட்சிப்பு ஊழியங்கள், சாலிகிராமம், சென்னை-93, தென்னிந்தியா. எங்கள் வாட்ஸ்-அப் எண்: 9789914463.

# வேதாகம போட்டி-184

எஸ்தர் புத்தகம்

## 3 கேள்விகள் இரட்சிப்பு பத்திரிக்கையிலிருந்தும் 12 கேள்விகள் வேதாகமத்திலிருந்தும் கேட்கப்படுகின்றன

**வேதவசன இருப்பிடம் - இரட்சிப்பு பத்தரிக்கை பக்கம் எண் அவசியம் எழுதவேண்டும். பதில்கள் அனுப்ப கடைசிநாள்: 25-02-2026**

1. 'எஸ்தர்-உபவாசம்' எனப்படும் உபவாசத்தின் மறுபெயர் என்ன?
2. 'செத்தாலும் சாகிறேன்' என்பதை இணை திருமறைகள் எவ்வாறு கூறுகின்றன?
3. 'எஸ்தர்-உபவாசம்' சாதாரண விடுதலை அல்ல - எந்த விடுதலையை அளித்தது?
4. சூசான் அரமனையில் 500பேரைக் கொன்று நிர்மூலமாக்கியவர்கள் யார்?
5. ஆகாகியனான ஆமானுடைய மனைவியின் பெயர் என்ன?
6. ராஜாத்தியாகிய எஸ்தர் உட்காருகிற மெத்தைமீது விழுந்துகிடந்தது யார்?
7. 'சூசான் நகரம் கலங்கிற்று' - **சரியா தவறா?**
8. 'ஆமானின் பத்து குமாரருடைய உடலையும் எரித்தார்கள்' - **சரியா தவறா?**
9. 'சூசான் நகரம் ஆர்ப்பரித்து மகிழ்ந்திருந்தது' - **சரியா தவறா?**
10. ராஜஸ்திரீயான வஸ்தியும் அரமனையில் 'இவர்களுக்கு' விருந்து செய்தாள்:
அ) பிரபுக்களுக்கு ஆ) பாடகருக்கு இ) பிரதானிகளுக்கு ஈ) ஸ்திரீகளுக்கு
11. 'இவரின்' கட்டளை பூரீம் நாட்கள் பற்றிய வர்த்தமானங்களை திடப்படுத்தியது:
அ) எஸ்தர் ஆ) ஆமான் இ) அகாஸ்வேரு ஈ) வஸ்தி
12. இரட்டுடுத்தியபடி 'இதன்' வாசலில் பிரவேசிக்க ஒருவருக்கும் உத்தரவில்லை:
அ) ஆலயம் ஆ) அரமனை இ) கொலுமண்டபம் ஈ) கன்னிமாடம்
13. ஓ.. ஓ.. மரமே, உயர்ந்த மரமே!
ஓர் இரவுக்குள் வளர்ந்த மரமே!
வளர்த்தவன் உயிரைக் குடித்த மரமே! **இது என்ன மரம்?**
14. மாளிகை வாயிலில் அமர்தவன், மஹாராணிக்கு நான் அண்ணன்!
மன்னரின் உயிரைக் காத்ததென் நேர்மை!
மருவிய மக்களை மீட்டதென் பெருமை! **நான் யார்? நான் யார்?**
15. பேரரசின் தலைநகரம், 'பேலஸ்' இருந்த பெருநகரம்!
கட்டளையின் தலைநகரம், கலங்கிற்று இந்த பெருநகரம்!
ஆணையின் தலைநகரம், ஆர்ப்பரித்த பெருநகரம்! **எந்த நகரம்? இது எந்த நகரம்?**

---

பதில் அனுப்பவேண்டிய முகவரி: திருமதி.ஜெயசீலி தர்மராஜா, எஃப்-1, முதல் மாடி, பாரதி பிளாட்ஸ், எண்: 4/2-A பாரதி தெரு, காந்தி நகர், சாலிகிராமம், சென்னை-93. வாட்ஸ்-அப்: 9789914463

=====================================================================================================

## கர்த்தருடைய நாமங்களின் மகத்துவங்கள்

பாகம்-81 பிப்ரவரி 2026 எப்பிசோடு-81

# கேடகமுமானவர்

**GOD OUR SHIELD**

Yahweh Meganenu – யாவே மேகன் ஈனு

கர்த்தரே நமக்குத் துணையும் நமக்குக் கேடகமுமானவர்.
**சங்.** 33:20

The Lord is our help and our shield. Ps. 33:20



**சகோ. சி. ஏஞ்சல்**

சத்துவத்தையும் பெலனையும் அருளுகிற இஸ்ரவேலின் தேவனுடைய நாமத்தில் இரட்சிப்பின் விசுவாசிகளுக்கு பிப்ரவரி மாத கிருபையின் நல்வாழ்த்துக்கள்.

**கர்த்தர் யாருக்கு கேடகமாக இருக்கிறார்?**

**சங்.33:20** 'என் அப்பா என்னுடன் என்ன பேசப்போகிறார்', என்று சொல்லி கர்த்தருக்கு காத்திருக்கிற ஆத்துமாக்களுக்கு அவர் கேடகமாயிருக்கிறார்.

**நீதி.30:5** தம்மை அண்டிக்கொள்கிறவர்களுக்கு கர்த்தர் கேடகமாயிருக்கிறார்.

**ஆதி.15:1, 14:16,23** தேவனைவிட்டு பின்மாற்றமடைந்த சகோதர சகோதரிகளுக்காக திறப்பிலே நின்று அவர்களை தேவனிடமாய் திருப்புகிறவர்களுக்கும் மற்றும் தேவைகளுக்காக கர்த்தரிடம் தங்கள் கரங்களை உயர்த்துகிறவர் களுக்கும் அவர் மகா பெரிய பெலனும் கேடகமுமாயி ருக்கிறார். எதிரிகளின் கண்களுக்கோ, குருட்டாட்டத்தின் ஆவியை அனுப்புகிறார் (ஆதி.19:11).

**எபே.6:16** பொல்லாங்கன் எய்யும் அக்கினி ஆஸ்திரங்களை அவித்துப்போடத் தக்கதாக, விசு வாசத்தின் ஆவியானவர் நம்மை நிரப்புகிறார். சத்துருவின் சகல வல்லமைகளையும் மேற் கொள்ளுகிற வல்லமையைத் தருகிறார். வேதத்தில் உள்ள ஆவிக்குறிய இரகசியங்களை அறிந்து கொள்ளும்படிக்கு, இந்த லெந்து காலத்தின் நம்முடைய மனக்கண்களைத் திறக்கிறார். அல்லேலூயா!

**2சாமு.22:36** இரட்சிப்பின் கேடகத்தைத் தருகிறார். 'ஆபிரகாமின் ஆசீர்வாதம் எங்களுக்குறியது' என்ற விசுவாசத்தைத் தருகிறார். அல்லேலூயா!

**ஜெபம்:** எங்களுக்கு பலத்த அரணாயிருந்து, எங்கள் வழிகளை செவ்வைப்படுத்துகிறவரும், எங்கள் கேடகமுமான கர்த்தரே! உம்மைத் துதிக்கிறோம். வெண்கல வில்லும் எங்கள் புயங் களால் வளையும்படி, எங்கள் கைகளை யுத்தத்திற்கு பழக்குவிக்கிற உம்முடைய கரங்களில் எங்களை அர்ப்பணிக்கிறோம். இயேசுவின் நாமத்தில் ஆமென், பிதாவே.

---

**தொகுப்பு: சகோ. சி. ஏஞ்சல் B.SC திருநெல்வேலி, தென்னிந்தியா**



**தேன்-துளி வேத வசனக் கதைகள்**

(கதை-177 பிப்ரவரி 2026)

## பரிதபிக்கும் பக்தருக்கு
# பயிற்சி அளிக்கும் பரமன்

சகோ. எம். அசரியா ஞானதாஸ் எம்.ஏ; எம்.எட்

காட்டில், கொடிய மிருகங்களால் சாதுவான விலங்குகளுக்கு பல ஆபத்துக்கள் நேரிடுவதுண்டு. விலங்குகள் தங்கள் குட்டிகளுக்கு பாதுகாப்புப் பயிற்சிகளை அளிக்கும் திறன், அவற்றுக்கு இறைவன் கொடுத்த வியத்தகு வரமாகும். யானைகள் பெரிய விலங்குகள் தான்; எனினும், அவை அநேக ஆபத்துகளை சந்திக்கவேண்டிய நிலையில் உள்ளன. யானைக் குட்டிகள் துஷ்ட மிருகங்களிடமிருந்து தப்பியோடும்போது குழிகளில் விழுந்துவிட்டால், அதிக ஆபத்து ஏற்படுகிறது. இச்சூழலில், வியத்தகு விதத்தில் குட்டிகளுக்கு சிறப்பு பயிற்சிகளை அளிக்கும் திறன், யானைகளுக்கு கிடைத்த தெய்வ வரமாகும்.

எப்படியெனில், யானைகள் கூட்டம், சென்றுகொண்டிருக்கும்போது சிறிய குழிகளை காணும் யானைகள் வேண்டுமென்றே தங்கள் குட்டிகளை குழிக்குள் தள்ளிவிட்டு, கூடவே தாங்களும் குழிக்குள் விழுந்து பின்னர் குழியிலிருந்து வெளியேற, குட்டிகளுக்கு ஒரு மாதிரியை காண்பித்து, குட்டிகள் வெளியே வரும் வரை காத்திருந்து, குட்டிகளுக்கு பயிற்சி;ய வழங்குகின்றன. இதைப் போன்றே குட்டிகள் வளர வளர பெரிய குழிகளில் தள்ளி விட்டு பயிற்சியை வழங்குகின்றன. முடிவில், குட்டி யானைகள், எவ்வளவு பெரிய குழியாயினும் அதிலிருந்து மீண்டுவரும் திறனைப் பெற்றுவிடுகின்றன. யானைகள் தங்கள் குட்டிகளை துன்புறுத்தும் நோக்குடன் குழிகளில் தள்ளிவிடுவதில்லை; மாறாக, தங்கள் குட்டிகளின் நன்மைக்கென்றே அப்படிச் செய்கின்றன.

பிரியமானவர்களே! நம் வாழ்விலும்கூட, நாம் சாத்தானின் சோதனைகள் மற்றும் ஆபத்து களிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டிய நிலையில், இயேசு கிறிஸ்து நம்மேல்; அன்புகூர்ந்து, குட்டி யானைக்கு பெரிய யானை பயிற்சி அளிப்பதுபோல் நம்மை பயிற்றுவிக்கிறவராய் இருக்கிறார். நாம் தாங்கிக்கொள்ளத்தக்கதான சோதனைகளைத்தான் நம் வாழ்வில் கடவுள் அனுமதிப்பார். எனவே, ஏன் எனக்கு இந்த சோதனை? என நாம் கேள்வி கேட்காமல், இயேசுவின் வல்ல கரங்களால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாய் வாழ்வோம்.

**வேதம் சொல்கிறது:**

கர்த்தர் தேவபக்தியுள்ளவர்களை சோதனையினின்று இரட்சிக்கிக்கிறார். 2பேது-2:9

கர்த்தாவே ! யுத்தத்துக்கு என்னை பலத்தால் இடைகட்டினீர். 2சாமு.22:40

கர்த்தர் என் கைகளை யுத்தத்துக்கு பழக்குவிக்கிறார். 2சாமு.22:35

---

**M.AZARIAH GNANADOSS M.A, M.ED**

**EDITOR, RATCHIPPU TAMIL CHRISTIAN MONTHLY, SALIGRAMAM, CHENNAI-93. MOBILE:9962924900**

===



இந்திய கிறிஸ்தவ திருச்சபை சரிதை

(1முதல் 21ம் நூற்றாண்டுவரை)

# இரண்டாயிரம் ஆண்டு வரலாறு
# 2ம் வருகைக்குத் தயாராகு

தொகுதி-9 பகுதி-2(2) எப்பிசோடு-43 பிப்ரவரி 2026

**கட்டுரை ஆசிரியர்: அறிவர். திருமதி. சலோமி மனோகர்**

**9. இந்திய கிறிஸ்தவம் - 17ம் நூற்றாண்டு:**

**2.(2) பிரான்ஸ் - பிற ஐரோப்பியர் வருகை:**

இந்தியாவுக்கு பயணம் மேற்கொண்ட ஆரம்பகால ஐரோப்பியர் களில் பிரெஞ்சுக்காரர்களும் இருந்தார்கள். போர்ச்சுகல், இங்கிலாந்து மற்றும் நெதர்லாந்து ஏற்கனவே கிறிஸ்த பரப்பு களத்தில் இருப்பதால், கத்தோலிக்க பின்னணியுடைய பிரான்ஸ், பல்வேறு பதட்டங்களை யும் மதக்கொள்கை தொடர்பான அரசியல் சூழ்ச்சிகளையும் சந்தித்தது.

**ஹுஜினோட்கள்:** (HUGUENOTS) என்பவர்கள் 16 மற்றும் 17ஆம் நூற்றாண்டுகளில் பிரான்ஸைச் சேர்ந்த புராட்டஸ்டன்ட் சீர்திருத்த கிறிஸ்தவர்கள்; குறிப்பாக, ஜான் கால்வினின் போதனை களைப் பின்பற்றியவர்கள். இவர்கள் பிரான்ஸில் துன்புறுத்தப்பட்டனர்; இதனால், பலர் நாட்டை விட்டு வெளியேறி இங்கிலாந்து, ஜெர்மனி, அமெரிக்கா போன்ற நாடுகளில் தஞ்சம் புகுந்தனர், இது பிரான்ஸில் மத போர்களுக்கு வழிவகுத்தது. கி.பி.1598ல் பிரான்ஸ் மன்னர் 4ம் ஹென்றி 'நான்டெஸ் ஆணை'யை வெளியிட்டார். 'நான்டெஸ் ஆணை' (EDICT OF NANTES) என்பது புராட்டஸ் டன்ட்களுக்கு மத சுதந்திரம் மற்றும் சிவில் உரிமைகளை வழங்கி, கத்தோலிக்கர்கள் மற்றும் புராட்டஸ்டன்ட்ஸ் (ஹுஜினோட்) இடையே நடந்த நீண்ட மதப் போர்களை முடிவுக்குக் கொண்டுவரவும், பிரான்சில் அமைதி-ஒற்றுமையை; நிலைநாட்டவும் உதவியது.

**டிரென்ட் கவுன்சில் (கி.பி.1545-1563):** இக்கவுண்சில், பிரான்ஸ் கத்தோலிக்க சீர்திருத்த இயக்கங் களைத் தூண்டியது. ஆன்மீக புதுப்பித்தல் மற்றும் பாரம்பரிய கத்தோலிக்க விழுமியங்களுக்குத் திரும்புவதை வலியுறுத்துவதன்மூலம் புராட்டஸ்டன்ட் சீர்திருத்தத்தின் செல்வாக்குகளை எதிர்ப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தன. கார்டினல் பியர் டி. பெருல் மற்றும் செயிண்ட் பிரான்சுவா டி. சேல்ஸ் போன்றோர் இந்த சீர்திருத்தங்களை முன்னெடுத்துச் சென்றனர்; புதிய மத ஒழுங்குகளை நிறுவினர் மற்றும் கத்தோலிக்க மதத்தின் பக்தியுள்ள வடிவத்தை ஊக்குவித்தனர். இந்நிலையில் கத்தோலிக்க திருச்சபைக்குள் தோன்றிய புராட்டஸ்டன்ட் பிரிவுகளில் பெரும்பாலானவை ஓரங்கட்டப்பட்டு தடைசெய்யப்பட்டன.

**பிரான்ஸ் ஆதிக்கம்:** 17ம் நூற்றாண்டில், பிரெஞ்சு கத்தோலிக்கம் கிறிஸ்தவத்தில் ஆதிக்க மானது; இந்தக் காலகட்டத்தில் ஜேசுயிட்டுகள் இந்தியாவில் மிஷன்களை நிறுவி மிஷனரிப் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டனர். பிரான்ஸ் மன்னராட்சி ரோமன் கத்தோலிக்க போப் ஆட்சியுடன் நெருங்கிய உறவுகளைக் கொண்டிருந்தது. 14ம் லூயி போன்ற ஆட்சியாளர்கள் திருச்சபை மற்றும் அதன் நியமனங்கள் மீது கட்டுப்பாட்டை வலியுறுத்தினர். 14ம் லூயி, தனது

அதிகாரத்தை பலப்படுத்த காலினியிசத்தைப் பயன்படுத்தினார்; இது போப்புடன் மோதலையும் திருச்சபை விவகாரங்கில் ஆதிக்கத்தையும் ஏற்படுத்தியது.

ஹுஜினோட்களுக்கு எதிரான போக்கைக் கொண்டிருந்த மன்னர் 14ம் லூயி, 'நான்டெஸின் ஆணை'யை புறக்கணிக்கத் தொடங்கினார். ஹுஜினோட்களுக்கு வழங்கப்பட்ட அரசியல் சுதந்தி ரங்கள் பதற்றத்திற்கும் மோதலுக்கும் ஆதாரமாக மாறியது. கி.பி.1685ல் மன்னர் 14ம் லூயி, 'நான்டெஸின் அரசாணை'யை ரத்து செய்தார். ஹிஜினோட்களின் வீடுகளில் பிரஞ்சு போர்வீரர் களை தங்கவைத்து அச்சுறுத்தும் 'டிராகனேட்ஸ்' கொள்கை செயல்படுத்தப்பட்டது. இது ஹிஜினோட்களின் துன்புறுத்தலுக்கும் பிரெஞ்சு குடியேற்றத்திற்கும் வழிவகுத்தது. புராட்டஸ் டன்ட் மக்கள்த்தொகை சரிந்தது; அது, மத நல்லிணக்கத்துக்கான உந்துதலை ஏற்படுத்தியது.

கடவுளின் முழுமையான இறையாண்மையையும் மனிதகுலத்தின் சீரழிவையும் வலியுறுத்தி, 'ஜான்சனிசம்' என்று அழைக்கப்படும் ஒரு இறையியல் இயக்கம் தோன்றியது. 'ஜான்சனிசம்' கத்தோலிக்க திருச்சபைக்குள் தீவிரமான இறையியல் விவாதங்களையும் அருள் மற்றும் சுதந்திரம் குறித்த சர்ச்சைகளையும் தூண்டியது, இந்த இயக்கம் 17 மற்றும் 18ம் நூற்றாண்டுகள் முழுதும் தொடர்ந்தது, இதனால் பிரெஞ்சு கத்தோலிக்க திருச்சபைக்குள் பிளவுகள் ஏற்பட்டன. 17ம் நூற்றாண்டில் இந்தியாவில், குறிப்பாக பாண்டிச்சேரியில் பிரெஞ்சு காலனித்துவ முயற்சி கள் மற்றும் இராணுவ வெற்றி மூலம் திருச்சபை விரிவாக்கம் ஏதும் நிகழவில்லை.

**பிற நாடுகள் (டென்மார்க்):** பிற ஐரோப்பிய சக்திகளுடன் ஒப்பிடும்போது டேனிஷ் கிழக்கிந்திய கம்பெனி சிறியதாய் இருந்தாலும், டென்மார்க்கின் மன்னர் 4ம் ஃபிரடெரிக் (லூத்தரன்) மிஷனரி பணியில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். அவர், கி.பி.1706ல் ஜீகன்பால்க் மற்றும் ப்ளுட்சாவை இந்தியாவுக்கு அனுப்பி, டிரான்குபாரில் டேனிஷ் மிஷனை நிறுவினார். டிரான்குபாரில், டேனிஷ் அதிகாரிகள் மற்றும் இந்திய மக்களின் எதிர்ப்புகளை டேனிஷ் மிஷனரிகள், சந்தித்தனர்; ஜீகன் பால்க் மற்றும் ப்ளுட்சாவ், உள்ளூர் மொழிகளை கற்றுக்கொண்டு பைபிள் உள்ளிட்ட மதநூல் களை மொழிபெயர்ப்பதில் தீவிர கவனம் செலுத்தினர்.

டிரான்க்யூபார் மிஷன், இந்தியாவில் புராட்டஸ்டன்ட் மதமாற்றங்களுக்கு மட்டுமின்றி, பள்ளிகள் அச்சகங்கள் போன்றவற்றை நிறுவுவதற்கும் வழிவகுத்தது. இந்த பணித்தள நிறுவனங்கள் லூத்தரனிசம் பரவுவதற்கு அடித்தளமிட்டதோடு, பூர்வீக இந்திய லூத்தரன் சமூகத்தின் வளர்ச் சிக்கும் பங்களித்தன. கி.பி.1653ல் ஒடுக்குமுறை மற்றும் லத்தீன் மயமாக்கலை எதிர்கொண்ட செயிண்ட் தாமஸ் கிறிஸ்தவ சமூகம், மட்டஞ்சேரியில், கூனன் சிலுவையில் கூடி, ரோமன் கத்தோலிக்க மற்றும் போர்த்துகீசிய ஆதிக்கத்தை எதிர்ப்பதாக உறுதிமொழி (கூனன் சிலுவை உறுதிமொழி) எடுத்துக்கொண்டது. தாமஸ் கிறிஸ்தவம் பிளவுபட்டது. 'பழையகூர்' பிரிவினர், கத்தோலிக்க திருச்சபையுடன் இணைந்து கிழக்கு-சிரியாக் வழிபாட்டு மரபைப் பின்பற்றினர். அறிவொளி இயக்கம், பகுத்தறிவு மற்றும் தனிநபர் சுதந்திரத்தின் மீது காட்டும் முக்கியத்துவம் ஆகியவை திருச்சபையின் அதிகாரத்தை மேலும் சவால் நிறைந்ததாக்கும் என்பது உண்மை.

இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு தொடரும்......

AUTHOR: DR. MRS. SALOMI MANOHAR M.A, M.PHIL, P.HD ASSISTANT PROFESSOR (RTD), (POPE'S COLLEGE, SAWYERPURAM) THIRUVANMIYUR, CHENNAI-41, SOUTH INDIA

==========================================================================

# ஜெப-ஜன்னல் ஜெப நேரங்கள் பிப்ரவரி 2026

**ஜெப-ஜன்னல்-1 காலை-ஜெபம்**

நாள்: 13-02-2026 இரண்டாம் வெள்ளி

நேரம்: காலை 5-முதல் 6-மணி வரை.

**ஜெப-ஜன்னல்-2 மதிய-ஜெபம்**

நாள்: 20-02-2026 மூன்றாம் வெள்ளி

நேரம்: மதியம் 1-முதல் 2-மணி வரை.

**ஜெப-ஜன்னல்-3 இரவு-ஜெபம்**

நாள்: 27-02-2026 நான்காம் வெள்ளி

நேரம்: இரவு 8-முதல் 10-மணி வரை.

பிரியமானவர்களே! இந்த ஜெப-ஜன்னல் ஜெப-நேரங்களில் தானி-6:10 வசனத்தின்படி “தானியேல், மேலறையில் எருசலேம் தேவாலயத்திற்கு நேராய் பலகணிகள் திறந்திருக்க” ஜெபித்ததைப் போல் நமது இயக்குநரும், ஜெப-ஜன்னல் ஜெப-வீரர்களும் ஆலயம் நோக்கி ஜெபிக்கவிருக் கிறார்கள். நீங்களும் இந்த நேரங்களில் உங்கள் ஆலயம் நோக்கி ஜெபிக்கும்படியாக அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

==========================================================================================

## DETAILS ABOUT US

**CONTACT DETAILS:**

MOBILE: 9962924900/7871676100

WHATSAPP: 9789914463/7871676100

E-MAIL: sjddharmaraja@gmail.com

OUR WEBSITE: www.ratchippu.com

POSTAL ADDRESS: REV. S.J.D. DHARMARAJA,

MISSION DIRECTOR, NO: 4/2-A, BARATHI ST.,

GANDHI NAGAR, SALIGRAMAM, CHENNAI - 93

ADDL. E-MAIL: ratchippuratchippu@gmail.com

**BANK DETAILS:**

NAME: DHARMARAJA SJD.

S.B. ACCOUNT NO: 601071548.

BANK & BRANCH: INDIAN BANK, NESAPAKKAM

IFSC CODE: IDIB000N122.

BANK ADDRESS: NESAPAKKAM, CHENNAI-78.

**UPI DETAILS:**

UPI NAME: GOOGL-PAY (G-PAY)

NAME: REV. DHARMARAJA SJD

G-PAY NUMBER: 9789914463

==========================================================================================

வசன தியானம்-166

எஸ்தர் உபவாசம்

# உயிர்களைக் காத்த உலர்-உபவாசம்



மூன்றுநாள் அல்லும் பகலும், எனக்காக உபவாசம்பண்ணுங்கள்; நானும் என் தாதிமாரும் உபவாசம் பண்ணுவோம்; இவ்விதமாக சட்டத்தை மீறி, ராஜாவினிடத்தில் பிரவேசிப்பேன்; நான் செத்தாலும் சாகிறேன். எஸ்தர்-4:16பி

எஸ்தர் ராணியின் வாழ்வில் நிகழ்ந்த இந்த சம்பவம், மக்களினம் அழிவை எதிர்கொள்ளும் சூழ்நிலைகளில், 'கூட்டு உபவாசம்' மற்றும் பிரார்த்தனை துணிவைத் தரும் என்பதை எடுத்துக் காட்டுகிறது. 'சம்மன்' இல்லாமல் ராஜாவை அணுகிவதற்காக மரண தண்டனை உண்டு என்ற அபாயத்தை எதிர்கொண்ட எஸ்தர், மூன்று நாள் உபவாச ஜெபத்தை அறிவித்தார். சூசாவில் உள்ள அனைத்து யூதர்களும் தன்னுடன் உபவாசத்தில் சேருமாறு கேட்டுக்கொண்டார். பயந்து நடுங்கிய நிலையிலிருந்து, 'நான் செத்தாலும் சாகிறேன்' (எஸ்.4:16) என துணிந்து சொல்லும் 'நெருப்புள்ள விசுவாசத்திற்கு' மாறினார்.

**எஸ்தர் ராணியின் துணிச்சலான செயலின் 4-முக்கிய அம்சங்கள்:**

கூட்டு வலிமை: எஸ்தர் ராணி, மொர்தெகாய் மற்றும் சூசாவிலிருந்த அனைத்து யூதர்களையும் 3-நாட்கள், இரவும் பகலும் தனக்காக உபவாசம் இருக்க அறிவுறுத் தினார். ஒரு நெருக்கடியான காலகட்டத்தில், கூட்டு உபவாச ஜெபம், ஒரு நபரை எப்படி பலப்படுத்துகிறது என்பதை இது விளக்குகிறது.

**உலர் உபவாசம்:** எஸ்தர்-4:16ல் குறிப்பிடப்பட்டுள்ள இந்த உபவாசம், உணவும் தண்ணீரும் இல்லாத 3-நாள் உபவாசம் ஆகும்;. 'எஸ்தர்-உபவாசம்' எனப்படும். இந்த உபவாசம் 'உலர்-உபவாசம்' என மறுபெயரிட்டு அழைக்கப்படுகிறது.

**தேவ-தயவு**: யூத மக்களை அழிக்க நினைத்த ஆமானின் பொல்லாத சதியை முறியடிப்பதில், கடவுளின் தயவைப் பெறுவதே இந்த உபவாசத்தின் நோக்கம்.

**கிரியைசெய்த விசுவாசம்:** இந்த உபவாசம் செயலற்றதாக இருக்கவில்லை. ராஜாவை அணுகி, ஆமானின் சதித்திட்டத்தை வெளிப்படுத்தி, தன் மக்களைக் காப்பாற்றும் துணிவுள்ள நல்ல நடவடிக்கையை எடுக்க எஸ்தருக்கு உதவியது.

எஸ்தர்-4:14ல் காணப்படும் 'இப்படிப்பட்ட காலத்துக்கு உதவியாய் இருக்கும்படி' என்ற சொற்றொடர், ஒரு நல்ல மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான தகுதியை கடவுள் நமக்கு அளித்துள்ளார் என்பதைப் புரிந்துகொண்டு செயல்பட நம்மை நினைவூட்டுகிறது. மனித சக்தியைவிட தெய்வ சக்தியை நம்புவதற்கும், பயத்தை துணிச்சலாய் மாற்றுவதற்கும் எடுத்துக்காட்டான இந்நிகழ்ச்சி யிலிருந்து நாம் பாடம் கற்றுக்கொள்வோம்.

---

அருட்திரு. தர்மராஜா, ஊழிய இயக்குநர், இரட்சிப்பு ஊழியங்கள், சென்னை-93, தென்னிந்தியா

==================================================================

# செய்தித்துளிகள் பிப்ரவரி 2026

1. அமெரிக்காவின் அமேசான் நிறுவனம் பொருளாதார நெருக்கடி காரணமாக கடந்த 3-ஆண்டு களில் 38,000 பணி இடங்களை குறைத்த நிலையில், 2026ம் ஆண்டில், தனது 16,000 ஊழியர் களைப் பணிநீக்கம் செய்ய திட்டமிட்டுள்ளது.

2. உலகில் போக்குவரத்து நெரிசல் அதிகமுள்ள நகரங்களில் மெக்சிகோ முதலிடத்தில் உள்ளது. பெங்களூர் 2ம் இடத்திலும், புனே, மும்பை, டெல்லி, கல்கத்தா, சென்னை நகரங்கள் முறையே 5, 18, 23, 30 மற்றும் 32ம் இடங்களில் உள்ளன.

3. சாலைப் பாதுகாப்பை மேம்படுத்தும் வகையில். ஒடிசா அரசு பேருந்துகளை இயக்க பெண் ஓட்டுநர்களை நியமிப்பது என ஒடிசா அரசு முடிவு. இதற்காக போக்குவரத்து துறை வளாகங்களில் ஓட்டுநர் பயிற்சி மையங்கள் அமைப்பு.

4. மீன்பிடி வலைகளில் சிக்குகிற ஆமைகளை பத்திரமாய் வெளியேற்றி, மீனவர் நலன்காக்கும் 'ஆமை விலக்கி' கருவி களை (TURTLE EXCLUDERS) ரூ.6.40 கோடி செலவில் 2663 மீனவர்களுக்கு இலவசமாய் வழங்குகிறது தமிழக அரசு.

5. இருபது நாடுகளின் அணிகள் பங்கேற்கும் 10வது டி20 உலகக்கோப்பை கிரிக்கெட் தொடர், இம்மாதம் 7ம் தேதி முதல் மார்ச் 8ம் தேதி வரை இந்தியா மற்றும் இலங்கை நாடுகளில் நடைபெற இருக்கிறது..

==========================================================================================

# தபசு காலம் 2026
# நல்வாழ்த்துக்கள்

அன்பார்ந்த இரட்சிப்பு பத்திரிக்கையின் வாசகர்கள், ஆதரவாளர்கள், படைப்பாளர்கள், அலுவலகப் பணியாளர்கள், வலைதள பணியாளர்கள், கைபிரதி களப்பணியாளர்கள், தபால்-துறை மற்றும் அச்சகத்து நண்பர்கள் அனைத்து திருச்சபை இறை மக்கள், ஆகிய உங்கள் அனைவருக்கும் எங்கள் உள்ளம் கனிந்த தபசு காலம் 2026 நல்வாழ்த்துக்கள்.




இரட்சிப்பு
ஊழிய-குடும்பத்தார்

**பிப். 18, 2026 புதன், முதல்**
**ஏப். 4, 2026 வெள்ளி வரை**